RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
www.malaithanthi.in
DAILY EVENING
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 187 | ஜூலை.13 2026 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# இந்தியா உலகிற்கே புதிய வளர்ச்சி மாதிரியை காட்டுகிறது; நியூசிலாந்தில் பிரதமர் மோடி பெருமிதம்

ஆக்லாந்து, ஜூலை.13-

இந்தியா இன்று உலக நாடுகளுக்கு ஒரு புதிய மற்றும் நிலையான வளர்ச்சி மாதிரியை வழங்கி வருவதாக பிரதமர் நரேந்திர மோடி பெருமிதத்துடன் தெரிவித்தார்.

தொழில்நுட்பம், டிஜிட்டல் உள்கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சி ஆகியவற்றின் மூலம் இந்தியா அடைந்து வரும் அசுர வளர்ச்சி, உலகப் பொருளாதாரத்தின் புதிய உந்துசக்தியாக மாறியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தோனேசியா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு சென்ற பிரதமர் நரேந்திர மோடி, அங்கு பல்வேறு முக்கிய ஒப்பந்தங்களை முடித்துக் கொண்டு தனது பயணத்தின் நிறைவாக நியூசிலாந்து வந்துள்ளார்.

நியூசிலாந்து தலைநகர் ஆக்லாந்தில் நடைபெற்ற இந்திய வம்சாவளியினர் நடத்திய மாநாட்டில், அந்த நாட்டு பிரதமர் கிறிஸ்டோர் லக்சனுடன் கலந்து கொண்டார்.

நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் மோடி, "வளர்ச்சி என்பது சிலருக்கானதாக மட்டும் இருக்கக் கூடாது. அது சமூகத்தின் அடித்தட்டில் இருக்கும் ஒவ்வொரு மனிதனையும் சென்றடைய வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக உள்ளது.



இந்தியாவின் 'யுபிஐ' டிஜிட்டல் பணப்பரி வர்த்தனை முறை மற்றும் கோவின் (CoWIN) போன்ற டிஜிட்டல் உள்கட்டமைப்புகள் இன்று வளர்ந்த நாடுகளையே பெரிதும் வியக்க வைத்துள்ளன. உலக நாடுகள் பலவும் இந்தியாவின் இந்த டிஜிட்டல் வளர்ச்சி மாதிரியைத் தங்கள் நாடுகளில் செயல்படுத்த ஆர்வம் காட்டி வருகின்றன" என்றார்.

தொடர்ந்து பேசிய அவர், "இந்தியா மிக விரைவில் உலகின் மூன்றாவது மிகப் பெரிய பொருளாதார சக்தியாக உருவெடுக்கப் போவதை உலக நாடுகள் அங்கீகரித்துள்ளன.

நிலையான அரசு, தொழில் தொடங்குவதற்கான எளிதான நடைமுறைகள் மற்றும் அசுர வேக உள்கட்டமைப்பு வளர்ச்சி ஆகியவற்றால் உலகளாவிய நிறுவனங்களின் முதல் முதலீட்டுத் தேர்வாக இந்தியா மாறியுள்ளது. இதன் தொடர்ச்சியாகவே, அடுத்த 15 ஆண்டுகளில் இந்தியாவில் 20 பில்லியன் அமெரிக்க (சுமார் ரூ.1,69,000 கோடி) முதலீடு செய்ய நியூசிலாந்து போன்ற நாடுகள் முன்வந்துள்ளன

இந்தியா வெறும் தொழிற்துறை வளர்ச்சியை மட்டும் இலக்காகக் கொள்ளாமல், சுற்றுச்சூழலைப் பாது காக்கும் 'பசுமைப் பொருளாதார மாதிரியை' உலகிற்கு அறிமுகப்படுத்தியுள்ளது. சூரிய சக்தி உற்பத்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பயன்பாட்டில் இந்தியா இன்று சர்வதேச அளவில் முன்னணியில் உள்ளது" என்றும் அவர் பேசினார்.

மேலும், "இந்தியா உலகிற்கு பிரச்சினை களைத் தரும் நாடு அல்ல. உலகளாவியப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைத் தரும் நாடு" என்றும் குறிப்பிட்ட பிரதமர் மோடி, உலக அமைதி உள்ளிட்டவைகளில் இந்தியா இன்று அனைத்து நாடுகளுக்கும் ஒரு நம்பகமான நண்பனாக மாறியுள்ளது என்றும் பெருமிதத்துடன் முழங்கினார்.

# கரூர் நெரிசல் வழக்கு சாட்சிகளை அச்சுறுத்துகிறார் முதல்வர் விஜய்

## உச்ச நீதிமன்ற கண்காணிப்பு குழுவுக்கு தி.மு.க., மனு

சென்னை, ஜூலை.13-

கரூர் கூட்ட நெரிசல் உயிரிழப்பு வழக்கு விசாரணையை கண்காணிக்க உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற நீதிபதி அஜய் ரஸ்தோகி தலைமையிலான கண்காணிப்புக் குழுவிடம் திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அளித்துள்ள மனுவில் கூறப்பட்டுள்ளதாவது: கடந்த ஜூலை 10ம் தேதி கரூரில் பேசிய முதல்வர் விஜய்,இந்த துயர சம்பவத்துக்கு கரூர் காவல் துறையே முழு பொறுப்பு என்பது போலவும், இதன் பின்னணியில் அரசியல் சதி இருப்பது போலவும் பேசியுள்ளார்.





இந்த வழக்கின் முக்கிய சாட்சிகளாக இருக்கும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் முன்னிலையிலேயே இந்த உரை நிகழ்த்தப்பட்டுள்ளது. தமிழக அரசின் உள்துறைச் செயலாளர். டிஜிபி ஆகியோர் ஏற்கெனவே உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள எதிர் ஆவணத்தில், 'தவெக அமைப்பாளர்களின் திட்டமிடப்படாத செயல்பாடுகளும், விதிமீறல்களுமே இந்த விபத்துக்கு காரணம்' என்று பூர்வாங்க விசாரணையின் அடிப்படையில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர்.

ஆனால், அதே உள்துறையை தன் வசம் வைத்துள்ள முதல்வர், அதற்கு முற்றிலும் முரணாக பொது வெளியில் பேசிசாட்சிகளை திசைதிருப்ப முயல்கிறார். இவ்வழக்கில் தவெக நிர்வாகிகள், அமைச்சர்கள் உள்ளிட்ட முக்கிய நபர்கள் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். அவர்கள் இதுவரை கைது செய்யப்படாததால், சாட்சிகளை சிதைக்கக் கூடாது என்ற நீதிமன்ற கட்டுப்பாடுகள் எதுவும் அவர்கள் மீது விதிக்கப்படவில்லை.

எனவே, இந்த விவகாரத்தில் முதல்வர் விஜய் ஆற்றிய உரை குறித்து சிபிஐ தனி புகார் பதிவு செய்ய உத்தரவிட வேண்டும். குற்றம் சாட்டப்பட்ட நபர்களை சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜராகச் செய்து, சாட்சிகளை அச்சுறுத்தக் கூடாது என்ற நிபந்தனையுடன் கூடிய பிணைப் பத்திரங்களை எழுதி வாங்க சிபிஐக்கு உத்தரவிட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# திருவாரூர் அருகே மண் திருட்டு; அரசு நடவடிக்கை எடுக்க டிடிவி தினகரன் வலியுறுத்தல்

சென்னை, ஜூலை.13-

திருவாரூர் மாவட்டம் வடக்கு ஏரியில் நடைபெறும் மண் திருட்டை உடனடியாக தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வலியுறுத்தியுள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி வட்டத்திற்கு உட்பட்ட துளசேந்திரபுரம் கண்ணாரப்பேட்டை வடக்கு ஏரியில் வண்டல் மண் எடுப்பதற்கு வழங்கப்பட்ட அனுமதியைப் பயன்படுத்தி அளவுக்கு அதிகமான மண்ணை எடுத்து சட்டவிரோதமாக தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்து வருவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

விவசாய நிலங்களின் வளத்தை மேம்படுத்தும் வகையிலும், நீர்நிலைகளின் கொள்ளளவை அதிகரிக்கும் நோக்கத்திலும் வழங்கப்பட்ட வண்டல் மண் எடுப்புக்கான அனுமதியை சட்ட விரோதமாகப் பயன்படுத்தி வருவோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய காவல்துறை, அதனை தட்டிக் கேட்ட இளைஞர்களின் மீது வழக்குப் பதிவு செய்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது.

அரசு வகுத்துள்ள விதிமுறைகளை காற்றில் பறக்கவிட்டு, அனுமதிக்கப்பட்ட அளவை விட பல மடங்கு அதிகமாக இயந்திரங்கள் மூலம் இரவு, பகலாக மண் தோண்டி எடுக்கப்பட்டு, தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்படுவது குறித்து பொதுமக்கள் பலமுறை புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படாததின் மூலம் இந்த சட்டவிரோதச் செயல்களுக்கு காவல்துறையும் சம்பந்தப்பட்ட அரசுத் துறை அதிகாரிகளும் உடந்தையாக இருக்கின்றனரா என்ற சந்தேகம் அப்பகுதி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

எனவே, திருவாரூர் மாவட்டம் துளசேந்திரபுர கண்ணாரப்பேட்டை வடக்கு ஏரியில் நடைபெறும் மண் திருட்டை உடனடியாக தடுத்து நிறுத்திடும் நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, சட்டவிரோத மண் எடுப்பைத் தட்டிக் கேட்ட இளைஞர்கள் மீது பதியப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெற வேண்டும் எனவும் காவல் துறையையும், தமிழக அரசையும் வலியுறுத்துகிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

# ஏழை எளிய மக்களுக்கு வீட்டுமனை பட்டாக்களை உடனே வழங்க தனி வாரியம்

## அமைச்சர் செங்கோட்டையன் தகவல்

ஈரோடு, ஜூலை.13-

ஏழை, எளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை உடனே வழங்குவதற்காக ஐஏஎஸ் அதிகாரி ஒருவரை ஆணையராகக் கொண்டு, தனி வாரியம் அமைக்கப்பட உள்ளதாக அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்தார்.



ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் செய்தியாளர்களிடம் அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்ததாவது: பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களில் பெரும்பாலானவை வீட்டுமனைப் பட்டா தொடர்பான கோரிக்கைகள்தான். ஏழை, எளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை தாமதமின்றி உடனே வழங்கும் நோக்கில், முதல்வர் உத்தரவுப்படி ஐஏஎஸ் அதிகாரி ஒருவரை ஆணையராகக் கொண்டு, தனி வாரியம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1000 நில அளவையர் நியமனம்: மேலும், மாநிலம் முழுவதும் நில அளவீட்டு பணிகளை விரைவுபடுத்தவும், நீண்டகாலமாக நிலுவையில் உள்ள பட்டா விண்ணப்பங்களுக்கு தீர்வு காணவும், வருவாய்த் துறை மூலம் தற்காலிக அடிப்படையில் 1,000 நில அளவையர்கள் நியமிக்கப்பட உள்ளனர். பூஜ்ய மதிப்பு நிலங்கள், நத்தம் நிலப் பிரச்சினைகள் உள்ளிட்ட சிக்கல்களுக்கும் விரைந்து தீர்வு காணப்படும்.சிப்காட் வளாகத்தில் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து மழைநீர் சேமிப்பு மூலம் நிலத்தடி நீரின் தரத்தை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு அவர் கூறினார்

# தீய சக்தி வீட்டிற்கு முதலமைச்சர் விஜய் சென்றது ஏன்? முன்னாள் அமைச்சர் சண்முகநாதன்

தூத்துக்குடி, ஜூலை.13-

தீய சக்தி என்று சொல்லிவிட்டு ஸ்டாலின் வீட்டிற்கு எதற்காக முதலமைச்சர் விஜய் சென்றார்? என அதிமுக முன்னாள் அமைச்சர் சண்முகநாதன் கூறியுள்ளார்.



தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி அருகே உள்ள கட்டாலன்குளத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் அழகு முத்துக்கோனின் 316வது குருபூஜை விழாவை முன்னிட்டு அவரது திருவுருவ சிலைக்கு அதிமுக சார்பில் முன்னாள் அமைச்சர் சண்முகநாதன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இதைத்தொடர்ந்து அவர் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் பேசுகையில், "கூட்டு களவாணி, தீய சக்தி எல்லாமே முதலமைச்சர் விஜய் தான். வெளிநாட்டிலிருந்து வாங்கி வந்த ஆடம்பர காருக்கு வரியை கட்டாமல், நீதிமன்றத்திற்கு சென்றார். ஆகையால், இந்த நாட்டிற்கே தீய சக்தி என எடுத்துக் கொண்டால் அது முதலமைச்சர் விஜய்தான்.

எனது ஆட்சியில் ஊழல் இல்லை என்று முதலமைச்சர் விஜய் கூறுகிறார். ஒவ்வொரு தவெக சட்டமன்ற உறுப்பினரும் தெருத்தெருவாக பணத்துக்காக அலைகிறார்கள். கடந்த ஆட்சியில் வழங்கப்பட்ட டெண்டரை எதற்காக ரத்து செய்கிறார்கள்? அதை ரத்து செய்தால் தானே அந்த ஒப்பந்ததாரரிடம் இருந்து கமிஷன் கிடைக்கும்.

குளத்தில் வண்டல் மண்ணை இலவசமாக எடுக்கலாம் என கூறிவிட்டு, வண்டல் மண் எடுப்பவர்களிடம் அந்த தொகுதி எம்எல்ஏக்கள் 300 ரூபாய் வரை பணம் வசூலிக்கிறார்கள். இவர்கள் ஆட்சியில் எந்த இடத்தில் ஊழல் இல்லை? பத்திரப்பதிவு அலுவலகத்தில் இல்லையா?, தாலுகா அலுவலகத்தில் இல்லையா?

மேலும், எங்கே தோற்றுவிடுவோமோ என்கிற அச்சத்தில் பெரம்பூர், திருச்சி கிழக்கு என இரண்டு தொகுதிகளில் அவர் நின்றார். தமிழ்நாட்டு மக்கள் முழுமையாக அவரை ஆதரிக்கவில்லை. மூன்றில் ஒரு பங்கு தான் ஆதரித்துள்ளார்கள். ஆனால், ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும் ஆதரித்ததாக அவர் கூறி வருகிறார்.

தீய சக்தி என்று சொல்லிவிட்டு ஸ்டாலின் வீட்டிற்கு எதற்காக முதலமைச்சர் விஜய் சென்றார்? ஆட்சி அமைக்க ஆதரவு கொடுத்து விட்டார்கள் என்பதற்காக இப்போது திமுகவை வாய்க்கு வந்தபடியெல்லாம் விமர்சிக்கக் கூடாது. இது அரசியல் நாகரீகம் கிடையாது" என்றார்.

தொடர்ந்து, அவரிடம் ஸ்ரீவைகுண்டம் ஏரல் வாரச் சந்தை பிரச்சனை தொடர்பாக திமுக, அதிமுக இணைந்து போராடியது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதிலளித்த அவர், "70 ஆண்டு காலமாக நடைபெற்று வந்த ஏரல் வாரச்சந்தை வியாபாரிகளிடம் ஸ்ரீவைகுண்டம் எம்எல்ஏ பணம் கேட்டு பேரம் பேசியுள்ளார். இதை தர முடியாது என அவர்கள் மறுத்ததால், ஆய்வு என்கிற பெயரில் சந்தையை மூடிவிடுவதாக வியாபாரிகளிடம் அவர் மிரட்டல் விடுத்துள்ளார்.

மேலூம், விரைவில் வார சந்தை அகற்றப்படும் என நோட்டீஸும் வைக்கப்பட்டு உள்ளது. இதை எதிர்த்து திமுக, பாஜக மற்றும் அதிமுக உறுப்பினர்கள் போராட்டம் செய்தோம். அத்துடன், அங்கு வைக்கப்பட்டிருந்த அறிவிப்பு பதாகையையும் அப்புறப்படுத்தி எங்களுடைய எதிர்ப்பை வெளிக்காட்டினோம்" என்றார்.

# நடை ரோந்து (Foot Patrolling) மூலம் குற்றங்கள் நடைபெறா வண்ணம் கண்காணிக்கும்

தேனி, ஜூலை.13-

தேனி மாவட்ட காவல்துறையினர். பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கிலும், தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரி.ஷி.பிரவீன் கௌதம், உத்தரவின் பேரில், தேனி மாவட்ட காவல்துறையினர் இரவு நேரங்களில் தீவிர நடை ரோந்து (Foot Patrolling) பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.



மக்கள் அதிகம் கூடும் இடங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் முக்கிய சாலைகளில் காவல்துறையினர் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடை ரோந்து பணியின் மூலம் திருட்டு, வழிப்பறி, சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுத்து, சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# உலக மக்கள் தொகை தினம் 2026ஐ முன்னிட்டு, செவிலியர் பயிற்சி பள்ளி மாணவிகள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி மற்றும் விழிப்புணர்வு ரதத்தினை, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு கொடியசைத்து துவக்கி வைத்தார்

உதகை, ஜூலை.13-

நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை (குடும்ப நல செயலகம்) சார்பில், உலக மக்கள் தொகை தினம் 2026ஐ முன்னிட்டு, செவிலியர் பயிற்சி பள்ளி மாணவியர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி மற்றும் விழிப்புணர்வு ரதத்தினை, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு கொடியசைத்து துவக்கி வைத்து, விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்களை வழங்கினார்.உலக மக்கள் தொகை தினத்தினை முன்னிட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து




துவக்கி வைத்தார். இப்பேரணியானது, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் துவங்கி முக்கிய சாலைகளின் வழியாக செவிலியர் பயிற்சி பள்ளியில் நிறைவு பெற்றது. இப்பேரணியில், குடும்ப நல செயலக பணியாளர்கள், மாவட்ட விரிவாக்க கல்வியாளர்கள், புள்ளி விவர உதவியாளர், வட்டார சுகாதார புள்ளியியலாளர்கள் மற்றும் செவிலியர் பயிற்சி பள்ளி மாணவியர்கள் உட்பட 200க்கும் மேற்பட்டோர் மக்கள் தொகை தொடர்பான விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியவாறு பேரணியில் கலந்து கொண்டனர்.முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் உலக மக்கள் தொகை தினம் தொடர்பான விழிப்புணர்வு உறுதிமொழியினை, அனைத்துத்துறை அலுவலர்கள் மற்றும் மாணவியர்கள் ஏற்றுக்கொண்டனர். இப்பேரணியில், இணை இயக்குநர் (மருத்துவ பணிகள்)ராஜசேகரன், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் ஸ்ரீனிவாசன், துணை இயக்குநர் (காசநோய்) கனகராஜ், மாவட்ட விரிவாக்க கல்வியாளர் சார்லஸ்ராஜன், செவிலியர் பயிற்சி பள்ளி பயிற்றுனர், செவிலியர் பயிற்சி பள்ளி மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# காவேரிப்பட்டணத்தில் 165வது மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாம்: நூற்றுக்கணக்கானோர் பயனடைந்தனர்

கிருஷ்ணகிரி, ஜூலை.13-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணத்தில், காவேரிப்பட்டணம் பெண்ணார் அரிமா சங்கம், கோவை சங்கரா கண் மருத்துவமனை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட பார்வையிழப்பு தடுப்பு சங்கம், கோவிந்தசாமி அவர்களின் நினைவாக, திருமலை மெடிக்கல் மணிகண்டன் இணைந்து நடத்திய 165வது மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாமை அதிமுக துணை பொதுச்செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கே.பி.முனுசாமி அவர்கள் கலந்து கொண்டு குத்துவிளக்கு ஏற்றி முகாமை துவக்கி வைத்தார். காவேரிப்பட்டணம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற முகாமில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு கண் பரிசோதனை செய்து கொண்டனர். கண்புரை, பார்வைக் குறைபாடு உள்ளிட்ட பல்வேறு கண் நோய்களுக்கு மருத்துவர்கள் பரிசோதனை மேற்கொண்டு ஆலோசனைகள் வழங்கினர். அறுவை சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் தேர்வு செய்யப்பட்டு, கோவை சங்கரா கண் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று இலவசமாக அறுவை சிகிச்சை மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும், தேவையானவர்களுக்கு மருந்துகள் மற்றும் சிகிச்சை தொடர்பான வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் அதிமுக மாவட்ட இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை செயலாளர் கே பி எம் சதீஷ்குமார், மாவட்ட விவசாய அணி மோகன் அதிமுக நிர்வாகிகள் வாசுதேவன், விக்ரம் குமார், கேசவன், அபிராமி மதனகுமார் மற்றும் அரிமா சங்க நிர்வாகிகள் காவேரிப்பட்டணம் மருந்து வணிகர்கள் சங்க தலைவர் ரமேஷ், செயலாளர் ஜீவா கணேஷ், கார்த்திகேயன், ரோட்டரி கிளப் தலைவர் இன்பரசன், செயலாளர் ராஜகோபால், மருத்துவர் பரத் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.இந்த முகாமிற்கான ஏற்பாடுகளை காவேரிப்பட்டணம் பெண்ணார் அரிமா சங்க நிர்வாகிகள், தன்னார்வலர்கள் மற்றும் மருத்துவக் குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர். இலவசமாக தரமான கண் மருத்துவ சேவை கிடைத்ததால், முகாமில் பங்கேற்ற பொதுமக்கள் ஏற்பாட்டாளர்களுக்கும் மருத்துவக் குழுவினருக்கும் நன்றியை தெரிவித்தனர்.



■ சென்னை, கிண்டி புனித தோமையார் மலை, கண்டுமா நகரில் அமைந்துள்ள, அருள்மிகு ஸ்ரீ ஓம் சக்தி நாகாத்தம்மன் ஆலய புணராவர்த்தன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழும் மங்களகரமான ஸ்ரீ பராபவ வருடம் ஆனி மாதம் 28 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 12.07.2026, திரியோதசி திதி மிருகசீரிஷம் நட்சத்திரம் அமிர்த யோகம் கூடிய சுபயோக சுப தினத்தில், கன்னியா லக்னத்தில் ஸ்ரீ நாகாத்தம்மன் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு மஹா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து சுவாமி அலங்காரம் தீபாராதனை நடைபெற்ற பின்பு வருகை தந்த அனைவருக்கும் ஆலயம் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது. ஆலய தலைவர் கார்த்தி, செயலாளர் பிரகாஷ், பொருளாளர் தமிழ்ச்செல்வன் மற்றும் விழா குழுவினர் ஆகியோர் கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடத்தினர்.

# முதல்வர் விஜய்யை இழிவாக பேசியதாக ஆ.ராசா மீது பெரம்பலூர் அரசு மருத்துவர் புகார்

பெரம்பலூர், ஜூலை.13-

முதல்வர் விஜய் குறித்து திமுக எம்.பி ஆ.ராசா இழிவாக பேசியதாக குற்றம்சாட்டி பெரம்பலூர் எஸ்பியிடம் அரசு மருத்துவர் புகார் அளித்துள்ளார்.பெரம்பலூர் மாவட்டம் அம்மாபாளையம் அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றி வருபவர் ராசா மணிகண்டன். இவர் திமுக துணை பொதுச்செயலாளரும், நீலகிரி எம்.பியுமான ஆ.ராசா மீது பெரம்பலூர் எஸ்.பி லலித்குமாரிடம் புகார் மனு ஒன்றை அளித்துள்ளார்.அப்புகார் மனுவில் கூறியிருப்பதாவது: திருவாரூர் கலைஞர் கோட்டத்தில் கடந்த ஜூன் மாதம் 25ம் தேதி முன்னாள் அமைச்சர் மதிவாணன் இல்லத் திருமண விழா நடந்தது. இந்த விழாவில் திமுக தலைவரும் முன்னாள் முதல்வருமான மு.க.ஸ்டாலின், முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு, பொன்முடி ஆகியோர் கலந்து கொண்டனர். நீலகிரி தொகுதி எம்பி ஆ.ராசாவும் கலந்து கொண்டார்.

கூட்டத்தில் எம்.பி ஆ.ராசா பேசும்போது, தமிழகத்தில் அண்ணாவும், ராஜாஜியும் இருந்த பதவியில் இன்று நாதாரி தலைவர்கள் முதல்வர்களாக அமர்ந்து இருக்கிறார்கள் என்று முதல்வர் ஜோசப் விஜய்யை இழிவுபடுத்தும் படி பேசினார். இது அரசியல் நாகரிகத்திற்கு முரணானது, பொதுமக்களிடையே கருத்து மோதல்களை ஏற்படுத்தியுள்ளது.பொது வெளியில் ஒரு எம்.பி இப்படி பேசியிருக்கக்கூடாது. இது மிகவும் கண்டனத்திற்குரியது. கருத்துச் சுதந்திரத்துக்கும், அரசியல் அமைப்பு சட்டத்துக்கும் உரிய மதிப்புளிக்காமல் ஆ.ராசா பேசியுள்ளார். இது தமிழக முதல்வரை இழிவுபடுத்தும் செயல். எனவே பெரம்பலூர் போலீஸார், எம்.பி ஆ.ராசா மீது சட்டப்படி வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மருத்துவர் ராசா மணிகண்டன் கூறியுள்ளார்.அந்த மனுவை வாங்கிய எஸ்பி லலித்குமார் நடவடிக்கை எடுப்பதாக கூறினார். ஆனால் இதுவரை மருத்துவர் ராசா மணிகண்டன் அளித்த புகாரின் பேரில் எந்த வழக்கும் பதிவு செய்யவில்லை என்று எஸ்பி அலுவலகம் தரப்பில் கூறப்பட்டுள்ளது

# ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே நத்தம்பட்டியில் ஜீப் வாகனம் கவிழ்ந்த விபத்தில் ஓட்டுநர் உள்பட 3 பேர் உயிரிழப்பு

ஸ்ரீவில்லிபுத்தூர், ஜூலை.13-

ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே நத்தம்பட்டியில் ஜீப் வாகனம் கவிழ்ந்த விபத்தில் ஓட்டுநர் உள்பட 3 பேர் உயிரிழந்தனர். கல்லிப்பட்டி அருகே கோயிலுக்கு சென்றுவிட்டு திரும்பும் வழியில் ஜீப் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. விபத்தில் வத்திராயிருப்பைச் சேர்ந்த கார்த்திக், அங்காள ஈஸ்வரி, ஓட்டுநர் பூபதி ஆகியோர் உயிரிழந்தனர்.




விபத்தில் காயமடைந்த 6 பேர் ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்

# புழல் அருகே காவாங்கரை பகுதியில் பெரிய இரும்பு தகடுகள் விழுந்து, சாலையில் நடந்து சென்ற 3 வயது சிறுவன் உயிரிழப்பு

சென்னை, ஜூலை.13-

சென்னையை அடுத்த புழல் அருகே காவாங்கரை பகுதியில், அலட்சியமாக நடந்த பாதாளச் சாக்கடை பணிகளால், தந்தையுடன் நடந்து சென்ற 3 வயது சிறுவன் மீது இரும்புத் தகடுகள் விழுந்து உயிரிழந்தான். எவ்வித பாதுகாப்பும் இன்றி ஜேசிபி மூலம் இரும்பு தகடு தூக்கப்பட, ரோப் அறுபட்டதால் சிறுவன் ஷாருக் ஈஸ்வரன் மீது தகடு பலமாக விழுந்தது. உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சிறுவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தான்



■ சென்னை, போரூர் ஆற்காடு சாலையில் அமைந்து, அருள்பாலித்து வரும் அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகியாக, அப்பகுதியில் வேண்டுகோளுக்கு வேண்டும் வரம் தரும் அம்மனாக , அருள்மிகு ஸ்ரீதேவி கருமாரி அம்மனுக்கு, நூதன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா சிறப்பாக நடைபெற்றது. இக்கோயில் சென்னை மெட்ரோ ரயில் திட்டப் பணிக்காக இடமாற்றம் செய்து ஆஞ்சநேயர் கோவில் அருகில் புதிய ஆலயம் கட்டப்பட்டு, அப்பகுதி மக்கள் அனைவரது ஏற்பாட்டாலும் இப்பணி நிறைவுற்று, பராபவ வருடம் ஆனி மாதம் 28ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 12.07.2026, திரியோதசி திதியில் மிருகசீரிஷ நட்சத்திரத்தில் சித்தயோகம் கூடிய சுபயோக சுப தினத்தில், கன்னியா லக்னத்தில் கும்பாபிஷேக விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். ஆலய தலைவர் மகேந்திரன்,சங்கர், துணைத் தலைவர் செல்வம், செயலாளர் ராஜி, பொருளாளர் மனோகரன் மற்றும் விழா குழுவினர் கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடத்தினர்.

# உலக மக்கள் தொகை விழிப்புணர்வு முகாம் அனுசரிக்கப்பட்டது

தேனி, ஜூலை,13-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் உலக மக்கள் தொகை தினம்

2026ஐ முன்னிட்டு நடைபெற்ற விழிப்புணர்வுப் நடைப்பயணப் பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், கொடியசைத்து தொடங்கி வைத்தார்.மக்கள் தொகை பெருக்கத்தின் விளைவுகளைப் பற்றியும் மக்கள் தொகையை கட்டுப்படுத்துவதன் அவசியத்தைப் பற்றியும், நாட்டு மக்களிடையே எடுத்துக் கூறி விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் “ ஜீலை 11ஆம் நாளில் உலக மக்கள் தொகை தினம்” அனுசரிக்கப்பட்டு வருகிறது.அதனடிடைப்பில் இன்றையதினம் “தாய் மற்றும் குழந்தையின் நலனுக்காகவும், திட்டமிடப்படாத




கர்ப்பங்களைத் தடுப்பதற்காகவும், கர்ப்பங்களுக்கிடையே ஆரோக்கியமான கால இடைவெளியினைப் பேணுவோம்” என்ற கருப்பொருளினை மையமாகக் கொண்டு, நடைபெற்றப் பேரணியில் 100க்கும் மேற்பட்ட செவிலியர்கள் மற்றும் கல்லூரி மாணவிகள் கலந்துகொண்டு, விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியும் கோசங்கள் எழுப்பியவாறும் ஊர்வலமாக நடந்து சென்றனர். அதனைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில் மக்கள் தொகை கட்டுப்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் குறித்த சிறப்புக் கருத்தரங்கம் நடைபெற்றது இக்கருத்தரங்கில் இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) மரு.கலைசெல்வி, அரசு தேனி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.முத்துசித்ரா, மாவட்ட சுகாதார அலுவலர் வரதராஜன் ஆகியோர் மக்கள்தொகை கட்டுப்பாட்டின் அவசியம் குறித்து கருத்துரைகளை வழங்கினார்கள். மேலும், அரசு செவிலியர் பயிற்சிப்பள்ளி மாணவிகளின் விழிப்புணர்வு வில்லுப்பாட்டு மற்றும் மைம்ஸ் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. கலை நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைத்து மாணவிகளுக்கும் பரிசுப்பொருட்கள் வழங்கப்பட்டது. உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு அரசு செவிலியர் பயிற்சிப்பள்ளி மாணவிகளிடையே நடத்தப்பட்ட பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கும், சிறப்பாகப் பணியாற்றிய கிராமப்புற செவிலியர்களுக்கும் கேடயங்கள் வழங்கி பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டது. முன்னதாக, உலக மக்கள்தொகை தின விழிப்புணர்வு உறுதிமொழியினை அனைவரும் எற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், துணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) மரு.அன்புச்செழியன், அரசு அலுவலர்கள் மற்றும் அரசு செவிலியர் பயிற்சி மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தேனி மாவட்டம்தேனி, உப்பார்பட்டி, உத்தமபாளையம் மற்றும் போடிநாயக்கனூர் ஆகிய இடங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் உணவுக் கிட்டங்கிகளை தமிழ்நாடு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் .ப. வெங்கடரமணன் நேரில் பார்வையிட்டு ஆய்வு

தேனி, ஜூலை.13-

தேனி மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் தேனி மண்டல உணவுப்பொருள் கிட்டங்கிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், முன்னிலையில் தமிழ்நாடு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் .ப.வெங்கடரமணன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வின்போது தமிழ்நாடு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் .ப.வெங்கடரமணன் , தேனியில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் உணவுப்பொருள் இருப்புக் கிட்டங்கியினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்பொழுது அரிசி, பருப்பு, எண்ணெய் உள்ளிட்டப் பொருட்களை பார்வையிட்டதுடன், அதன்இருப்பு குறித்தப் பதிவேடுகளை ஆய்வு செய்து, உணவுப்பொருட்களை இருப்பு வைக்காமல், அவ்வப்போது நியாய விலைக்கடை அங்கன்வாடி மையம் உள்ளிட்ட அரசு பராமரிப்பில் உள்ள மையங்களுக்கு அனுப்பி வைக்கவும் உணவுப்பொருட்களின் தரம் குறைவாக இருந்தால் அதை உடனடியாக மாற்றி, தரம் உள்ள உணவுப்பொருட்கள் அனுப்புவதை உறுதி செய்து கொள்ள வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.அதனைத்தொடந்து, தேனி நுகர்பொருள் வாணிபக்கழக உணவுக்கிட்டங்கியில் ரூ4.71 கோடி மதிப்பீட்டில் தலா 1000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2 புதிய உணவுப் பாதுகாப்பு கிட்டங்கிகள் கட்டப்பட்டு வருவதை பார்வையிட்டு, பணிகளை விரைந்து



முடிக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தியதுடன், வருங்காலங்களில் புதிதாக கட்டக்கூடிய உணவுப்பொருள் இருப்புக் கிட்டங்கிகளில் conver system அமைத்திட வேண்டும் என அறிவுறுத்தியதுடன், இதன் மூலம் பொருட்களை எளிதாக அடுக்கி வைப்பதற்கு பணியாளர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என தமிழ்நாடு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் தெரிவித்தார். பின்னர், உப்பார்பட்டி சிப்காட் உணவுப் பூங்கா அருகில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம், அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் பெறப்பட்ட நெல் மூட்டைகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதை பார்வையிட்டு, இதற்கான அடுத்த நடைமுறை பணிகள் குறித்து கேட்டறிந்ததுடன் காலதாமதமின்றி நெல் மூட்டைகளை அரிசி ஆலைகளுக்கு அனுப்பி வைப்பதை அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டும் என அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, உத்தமபாளையம் மற்றும் போடிநாயக்கனூரில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக உணவுக் கிட்டங்கிகளுக்கு சென்று உணவுப் பொருட்களின் தரம் குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன், தரமான பொருட்களை சரியான எடையுடன் அனுப்புவதை அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும் என அறிவுறுத்தினார்,

அதனைத்தொடர்ந்துசுமை தூக்கும் தொழிலாளர்களை சந்தித்து நாள்தோறும் மேற்கொள்ளும் பணிகள் குறித்த விவரங்களை கேட்டறிந்ததுடன், தொழிலாளர்கள் முன்வைத்த ஊதிய உயர்வு, அடையாள அட்டை உள்ளிட்ட கோரிக்கைகள் குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தமிழ்நாடு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் .ப.வெங்கடரமணன் தெரிவித்தார். தமிழ்நாடு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் .ப.வெங்கடரமணன் அவர்கள் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்ததாவது, தேனி மாவட்ட மக்களின் கோரிக்கையினை கருத்தில் கொண்டு, இன்றையதினம் தேனி மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகக் கிட்டங்கிகளில் அரிசி, பருப்பு உள்ளிட்டப் பொருட்களின் தரம் மற்றும் பெறப்படும் பொருட்களின் எடை, அவை சரியான எடை அளவுடன் நியாயவிலைக்கடைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறதா என்பது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகக் கிட்டங்கிகளிலிருந்து பள்ளிகள், விடுதிகள், மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் பச்சைப்பயிறு, சுண்டல் உள்ளிட்டப் உணவுப்பொருட்களின் தரம் குறித்தும், பொருட்களின் இருப்பு குறித்து பதிவேடுகளில் முறையாக பதியப்பட்டுள்ளதா என்பது குறித்து ஆய்வு மேற்கொண்டு, கிட்டங்களில் பணியாற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை மற்றும் தேவைகள் குறித்து கேட்டறிப்பட்டது. தமிழ்நாட்டிலிருந்து பிற மாநிலங்களுக்கு அரிசி கடத்தலை தடுக்கும் பொருட்டு, வருங்காலங்களில் தடுப்பு காவல்துறை, வருவாய்த்துறை, வனத்துறை, வட்டாரப்போக்குவரத்துத்துறை மற்றும் வழங்கல் துறைகளை ஒருங்கிணைத்து சோதனைச் சாவடி (check post) அமைக்கப்படும். குறிப்பாக சரியான எடை அளவில் உணவுப்பொருட்கள் வழங்குவதை உறுதி செய்யும் வகையில் நவீன தொழில்நுட்பத்தை கையாள உள்ளோம்.. மேலும், நுகர்பொருள் வாணிபக்கழக அலுவலர்கள், நியாயவிலைக்கடை பணியாளர்களுக்கு கூட்டங்கள் நடத்தப்பட்டு, தரமானப் பொருட்களை நிர்ணயிக்கப்பட்ட அளவில் பொதுமக்களுக்கு வழங்குவதை உறுதி செய்ய வேண்டும் எனவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. தேனி மாவட்டத்தில் உள்ள 15 தற்காலிக கொள்முதல் நிலையங்களில் 14,620 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. இனிவரும் காலங்களில் நிரந்தர நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், எல்நினோ பாதிப்பினை கருத்தில் கொண்டு, திறந்தவெளி கொள்முதல் நிலையங்கள் தரம் உயர்த்துவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

டெல்டா மாவட்டங்களுக்கு தேவையான தண்ணீரை போர்வெல் மூலமாகவும், தண்ணீர் கிடைக்கக்கூடிய பிற இடங்களிலிருந்து பற்றாக்குறையான இடங்களுக்கு பெற்று வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், விவசாயிகள் மாற்றுப் பயிரை பயிரிடுவதற்கான அறிவுரையும் வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அறிவுறுத்தலின்படி, நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இயந்திரங்கள் மூலம் பயிடுதலை எளிமையாக்கி விவசாயப்பரப்புகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தமிழ்நாடு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் ப.வெங்கடரமணன் தெரிவித்தார். இந்த ஆய்வில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர்.குணசேகர், உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் (பொ) .பஞ்சாபகேசன், மாவட்ட வழங்கல் அலுவலர் நல்லையா, துணைக் காவல் கண்காணிப்பாளர் (குடிமைப்பொருள் வழங்கல்)

.சிவக்குமார்.வட்டாட்சியர்கள் .சதீஷ்குமார் (தேனி), பாலசண்முகம் (உத்தமபாளையம்) நுகர்பொருள் வாணிபக்கழக கட்டிடப் பிரிவு உதவி பொறியாளர் ஜெயதேவி, தரக்கட்டுப்பாட்டு அலுவலர்கள் சிவக்குமார். ஷாகுல் ஹமீது, கண்காணிப்பு அலுவலர் சித்திக் ராஜா உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடன் இருந்தனர்.

ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில் தேசிய நெடுஞ்சாலை அமைக்கும் பணிகளுக்கு

## நிலங்களை கையகப்படுத்துவதற்கான இழப்பீடு தொகையை பெற்றுக்கொள்ள அழைப்பு

கிருஷ்ணகிரி, ஜூலை.13-

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை தாலுகாவில் தேசிய நெடுஞ்சாலை அமைக்கும் பணிகளுக்கு நிலங்களை கையகப்படுத்துவதற்கான இழப்பீடு தொகையை பெற்றுக்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை தாலுகாவில் உள்ள 25 கிராமங்கள் வழியாக தேசிய நெடுஞ்சாலை எண்.948ஏ எஸ்டிஆர்ஆர், சாலை அமைக்கும் பொருட்டு நில எடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி சாலை அமைக்கும் பணிகளுக்கான நிலங்களை கையகப்படுத்துவதற்கான இழப்பீட்டுத் தொகை நெடுஞ்சாலைகள் மற்றும்



சிறு துறைமுகங்கள் துறை அரசாணை நிலை எண.121, 24.7.2018ன்படி, ஏற்படுத்தப்பட்ட அதிகாரம் பெற்ற அலுவலர் மற்றும் தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு) அலுவலகத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

இதில் ஓசூர் தாலுகாவை சேர்ந்த தொரப்பள்ளி அக்ரஹாரம், மோர்னப்பள்ளி, ஆலூர், எஸ்.முதுகானப்பள்ளி, முகலூர், கோபனப்பள்ளி, அட்டூர் முத்தாளி, முத்தாளி, நந்திமங்கலம், அட்டூர் படுதேப்பள்ளி, தும்மனப்பள்ளி, மல்லசந்திரம், பட்டவாரப்பள்ளி, அலசப்பள்ளி, படுதேப்பள்ளி, காருப்பள்ளி, பாத்தமுத்தாளி, தேவீரப்பள்ளி, ஒசாபுரம், குந்துமாரனப்பள்ளி, பைரமங்கலம் ஆகிய கிராமங்களில் இழப்பீட்டுத் தொகை பெறாத நில உடமைதாரர்கள் தங்களது நிலங்களுக்கான ஆவணங்களுடன் ஓசூர், ராயக்கோட்டை சாலை, மின்வாரிய அலுவலகம் அருகில் (தெற்கு) உள்ள மின்நகர் 2வது தளம், கதவு எண்.39/8ல் இயங்கி வரும் அதிகாரம் பெற்ற அலுவலர் மற்றும் தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு) அலுவலகத்தில், அலுவலக நாட்களில், அலுவலக நேரங்களில் அணுகி இழப்பீட்டுத் தொகையை பெற்று கொள்ளலாம். இவ்வாறு தனது செய்திக்குறிப்பில் கலெக்டர் தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

## கிருஷ்ணகிரி நகராட்சியில்தெருநாய்களுக்கு தடுப்பூசி. இனப்பெருக்க கருத்தடை ஆபரேஷன்

கிருஷ்ணகிரி, ஜூலை.13-

கிருஷ்ணகிரி நகராட்சியில் தெருநாய்களுக்கு தடுப்பூசி மற்றும் இனப்பெருக்க கருத்தடை ஆபரேஷன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது குறித்து நகராட்சி ஆணையாளர் சேகர், நிருபர்களிடம் கூறியதாவது: கிருஷ்ணகிரி நகராட்சி பகுதிகளில் தெருநாய்கள் மற்றும் வீட்டில் வளர்க்கப்படும் நாய்களுக்கு ஏ.ஆர்.வி., (ஆன்டி ரேபிஸ் வைரஸ்) எனப்படும் வெறிநாய்க்கடி வராமல் தடுப்பதற்கான தடுப்பூசியை நாய்களுக்கு போடும் பணியில் நகராட்சி அலுவலர்கள், கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்களுடன் இணைந்து ஈடுபட்டு வருகின்றனர்.கிருஷ்ணகிரி நகராட்சியில் மொத்தம் 1,086 நாய்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.



இதில் முதல் கட்டமாக 526 நாய்களுக்கு தடுப்பூசி போடும் பணிகள் முடிந்தது. இரண்டாம் கட்டமாக தற்போது மீதமுள்ள, 560 நாய்களுக்கு தடுப்பூசி போடும் பணி நடந்து வருகிறது.நேற்று, நகராட்சியின், 19 மற்றும் 20 வது வார்டுகளில் சுற்றித்திரிந்த 35 தெருநாய்களுக்கு தடுப்பூசி போடப்பட்டது. மேலும், இனப்பெருக்க கருத்தடை ஆபரேஷனுக்காக, 5 நாய்கள் பர்கூர் கால்நடை மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இப்பணியில் கால்நடை மருத்துவர் முனிவெங்கட், நகராட்சி துப்புரவு ஆய்வாளர்கள் மாதேஷ், சோமேஷ் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து நடந்துவரும் இப்பணிக்கு பொதுமக்களும், சமுக ஆர்வலர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.



## குன்னூர் அருகே புதிய டாஸ்மாக் கடை பொதுமக்கள் எதிர்ப்பு இடையே திறப்பு

நீலகிரி, ஜூலை.13-

தமிழகத்தில் தவெக ஆட்சி பொறுப் பேற்றவுடன் மாநில முழுவதும் வழிபாட்டுத்தலங்கள், பள்ளி, கல்லூரி மற்றும் மக்கள் அதிகளவில் நடமாடும் பஸ் நிலையம் பகுதிகளில் செயல்பட்டு வந்த 717 டாஸ்மாக் கடைகள் அகற்றப்பட்டது. இந்நிலையில் மீண்டும் அகற்றப்பட்ட கடைகள் வேறு இடங்களுக்கு மாற்றி திறக்கப்பட்டு வருகிறது. இதில் ஒரு பகுதியாக நீலகிரி மாவட்டத்தில் 27 டாஸ்மாக் கடைகள் மூடப்பட்டு வந்த நிலையில் தற்போது ஆங்காங்கு கடைகள் திறக்கப்பட்டு வருகிறது இதனிடையே குன்னூர் அருகே பாலவாசி பெட்ரோல் பங்க் பகுதியில் நகராட்சி குடியிருப்பு அருகே புதியதாக டாஸ்மாக் கடை திறக்கப்படுவது குறித்து தகவல் கிடைத்தவுடன் அப்பகுதி மக்கள் கடை முன்பு குவிந்து முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.இது குறித்து தகவல் கிடைத்தவுடன் குன்னூர் டிஎஸ்பி ரவி தலைமையில் போலீசார் குவிக்கப் பட்டனர்.பின்னர் இது குறித்து குன்னூர் தாசில்தார் செந்தில்குமார் சம்பந்தப்பட்ட இடத்திற்கு வந்து முக்கிய நபர்களை அழைத்து சென்று பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.டாஸ்மார்க் கடை வைப்பதற்கு பொதுமக்கள் தரப்பில் எதிர்ப்பு தெரிவிக் கப்பட்டது.மேலும் மாவட்ட ஆட்சியர் ஒப்புதலின் பேரில் மாவட்ட வருவாய் ஆய்வாளர் ஆய்வு செய்து டாஸ்மாக் கடை நடத்த அனுமதித்துள்ள தாகவும் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து டாஸ்மாக் கடை திறக்க ப்பட்டது.இந்த விவகாரம் தொடர்பாக மாவட்ட ஆட்சியரை நேரில் சந்தித்து புகார் மனு கொடுப்பதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.



## ஊத்துக்கோட்டையில் அடைக்கல மாதா அன்னை ஆலயத்தின்24ம் ஆண்டு கொடியேற்றம் மற்றும் வீதிவுலா

திருவள்ளூர், ஜூலை.13-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை புனித அன்னை தேவ ஆலயத்தின் சார்பில் 24ம் ஆண்டு கொடியேற்றம் மற்றும் வீதிவுலா பவனி நிகழ்ச்சி பங்குத்தந்தை ஆல்பர்ட்ஜீடு, துணைத் தலைவர் பால் செல்வகுமார், செயலாளர் அதரியான்ஸ், பொருளாளர் அந்தோணிராஜ், அருட்சகோதரிகள் மற்றும் பாக்கியராஜ், சேவியர், ராபர்ட், வள்ளுவன், ஆல்பர்ட், வில்சன், ஒருங்கிணைப்பில் மாதாவின் திருவருவ சிலை வண்ண விளக்குகள் மற்றும் பூக்களால் அலங்கரிக்கப்பட்டு வீதி உலா கொண்டுவரப்பட்டு கொடியேற்றும் துவங்கியது ஏராளமானோர் இதில் கலந்து கொண்டு நேர்த்திக்கடன் செலுத்தி வழிபட்டனர்

## தாம்பரத்தில் அம்பேத்கர் மக்கள் நீதி இயக்கம் சார்பில் கொள்கை விளக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது

தாம்பரம், ஜூலை.13-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் பாரதி திடலில் அம்பேத்கர் மக்கள் நீதி இயக்கம் சார்பில் கொள்கை விளக்க பொதுக்கூட்டம் செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் வீர.அலெக்ஸ்சாண்டர் தலைமையில் மகளிர் அணி பொறுப்பாளர் பா.தாட்சாயணி வரவேற்பில் மிகச் சிறப்பாக நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக மே 17 இயக்க ஒருங்கிணைப்பாளர் திரு முருகன் காந்தி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில பொருளாளர்






சுபாஷ் மோகன், அம்பேத்கர் மக்கள் நீதி இயக்கம் மாநில பொதுச் செயலாளர் புரட்சி வேங்கை தெ.வைரமுத்து உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பு உரையாற்றினார் இக்கூட்டத்தில் சமூக நீதி சமத்துவம், அரசியலமைப்பு மதிப்புகள், டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் சிந்தனைகள் மற்றும் மக்கள் உரிமைகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. சமூக ஒற்றுமையை வலுப்படுத்தவும், அரசியலமைப்பு பாதுகாப்பை உறுதி செய்யவும் பொதுமக்கள் ஒன்றிணைய வேண்டும் என பேச்சாளர்கள் வலியுறுத்தினர்.இந்த நிகழ்வில் மாநில தலைவர் பாண்டியராஜன், மாநில ஒருங்கிணைப்பாளர் இர.பரந்தாமன், மாநில பொருளாளர் சுதாகர், மாநில துணை பொதுச் செயலாளர் வே.ராகவேந்திரன், மாநில இணை பொது செயலாளர் மா.சுரேஷ், மாநில துணை பொதுச் செயலாளர் ச.இளையராஜா, மாநில தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் வ.பாஸ்கரன், செங்கல்பட்டு மாவட்டம் தலைவர் ம.சதிஷ், பல்வேறு சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், இயக்க நிர்வாகிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் பங்கேற்றனர். நிகழ்ச்சி அமைதியான முறையில் நடைபெற்றதுடன், பொதுமக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.







# மதுரை மாநகராட்சி திமுக கவுன்சிலர்கள் சொத்து பட்டியலை வெளியிட தயாரா? நிர்மல் குமார் சவால்

மதுரை,ஜூலை,13-

"மதுரை மாநகராட்சி திமுக கவுன்சிலர்கள் அனைவரும், கவுன்சிலராக ஆவதற்கு முன் எவ்வளவு சொத்து வைத்திருந்தனர். தற்போது எவ்வளவு சொத்துக்கள் வைத்துள்ளனர் என்ற சொத்து பட்டியலை வெளியிட தயாரா?" என்று அமைச்சர் நிர்மல் குமார் சவால் விட்டுள்ளார்.

திருப்பரங்குன்றம் அடுத்துள்ள திருநகரில் மாற்று கட்சியினர் தவெகவில் இணையும் நிகழ்ச்சி நடந்தது. அமைச்சர் நிர்மல்குமார், இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மாற்று கட்சியினரை வரவேற்று பேசினார். அப்போது அவர் பேசியதாவது: தவெகவின் வளர்ச்சியால் தமிழகம் முழுவதும் திமுக, அதிமுக இரண்டு கட்சிகளுக்கும் மிகப்பெரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இரு கட்சிகளில் இருந்தும் கிளை கழகம் வரை கலைத்துவிட்டு தவெகவில் வந்து இணைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் என்ன நோக்கத்திற்காக கட்சியில் வந்து சேர்ந்து இருக்கிறார்களோ, அவர்கள் நோக்கம் நிறைவேறும். அவர்களுக்கான மரியாதையும், கவுரவமும் கொடுக்கப்படும். இன்று அரசியல் கட்சியினருக்கு மக்களுடன் கவுரவமாக பயணிக்க தவெக கட்சியை தவிர வேறு வழியில்லை. மக்கள் ஏற்றுக்கொண்ட ஒரே தலைவர் விஜய். அவரை பின்பற்றி மக்களுக்கு உண்மையாக பணியாற்றினால் நம்மையும் மக்கள் ஏற்றுக் கொள்வார்கள். உள்ளாட்சித் தேர்தல் எப்போது வேண்டுமென்றாலும் வரலாம். இந்த உள்ளாட்சித் தேர்தலில் தமிழகம் முழுவதும் தவெக கட்சி



யினர் களம் இறங்க உள்ளார்கள். மக்களுடைய ஆதரவுடன் 100 சதவீதம் நமது வேட்பாளர்கள் வெற்றிப்பெறுவார்கள். அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு உள்ளாட்சிகளிலும் தவெக ஆட்சி நடக்கும்.

மக்களிடம் தவெக கட்சியினர் லஞ்சம் எதுவும் வாங்கபோவதில்லை. மக்களோடு இன்று, நேற்று அல்ல. நமது நிர்வாகிகள், விஜய் ரசிகர் மன்ற காலத்தில் இருந்தே எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் 20 ஆண்டுகளாக பயணித்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் மக்கள் பிரதிநிதியாக வாய்ப்பு கிடைத்தால் இன்னும் அந்த பணியை சிறப்பாக செய்வார்கள். மக்களுக்கு சேவை செய்ய ஒரு அங்கீகாரத்தோடு போய் செய்வோம். மதுரை மாநகராட்சியில் திமுக கவுன்சிலர்கள் மக்கள் பணத்தை எவ்வளவு கொள்ளையடித்து இருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். மாநகராட்சி கூட்டத்தில் எங்களை நோக்கி அமைச்சர் எப்படி முறைகேடு செய்ததாக சொல்லலாம் என்றும், நாங்கள் முறைகேடு செய்யவில்லை என்றும் வாய் திறந்து சொன்னீர்கள் அல்லவா? திமுக கவுன்சிலர்கள் அனைவரும் தங்கள் சொத்து பட்டியலை வெளியிடத் தயாரா? கவுன்சிலராக வெற்றிப்பெறுவதற்கு முன் எவ்வளவு சொத்துகள் வைத்திருந்தனர், வெற்றி பெற்ற பிறகு தற்போது எவ்வளவு சொத்துகள் வைத்துள்ளனர் என்ற சொத்து விவரங்கள் பட்டியலை அவர்கள் வெளியிடத் தயாரா?.

திமுக கவுன்சிலர்கள் ஒவ்வொருவரும் எவ்வளவு கட்டிடங்கள், எத்தனை வணிக வளாகங்கள், எவ்வளவு வீடுகள் வைத்துள்ளனர் என்று மக்களே சொல்கிறார்கள். சாலையோர கடைகள் வரை சென்று திமுக கவுன்சிலர்கள் ரூ.500 முதல் ரூ.1,000 வரை வசூல் நடத்தியுள்ளனர். இன்னும் திமுக, அதிமுக கவுன்சிலர்கள் உள்ளாட்சி அமைப்புகளில் உட்கார்ந்து கொண்டு மக்களிடம் கொள்ளையடிக்கிறார்கள். முதல்வர் விஜய் கூறியுள்ளதை போல், யாரும் தற்போது லஞ்சம் கொடுக்காதீர்கள். இவ்வாறு அவர் பேசினார்.

## திருப்பத்தூர் மாவட்டம் தமிழ்நாடு யாதவ மகாசபை சார்பில் ஆம்பூரில் மாவீரருக்கு குருபூஜை விழா வெகு விமரிசையாக நடைபெற்றது







திருப்பத்தூர், ஜூலை.13-

இந்திய சுதந்திரப் போராட்ட முதல் மாவீரர் மாமன்னன் அழகுமுத்துக்கோன் அவர்களின் 269 ஆவது குருபூஜை விழா 11.07.2026 இன்று திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் பேருந்து நிலையம் முன்பு தமிழ்நாடு யாதவ மகாசபை சார்பில் மாவீரன் நினைவு போற்றும் வகையில் திருப்பத்தூர் மாவட்ட தலைவர் எஸ் எம் புவனேஸ்வரன் தலைமையில் மலரஞ்சலி செலுத்தப்பட்டது. வழக்கறிஞர் பிரிதிவிராஜ், ஆர்.வி. முருகன், டி. ராஜேந்திரன்,ஏ. பிரபாகரன், வி என் எஸ் சரவணன் ஆகியோர் முன்னிலை வைத்தனர் இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாக முன்னாள் நகர காங்கிரஸ் கமிட்டி தலைவரும் புவனம் அறக்கட்டளை நிறுவனர் எஸ். மாணிக்கம் அவர்கள் மலர் தூவி இனிப்பு வழங்கி அன்னதானத்தை துவக்கி வைத்தார் இந்நிகழ்வில் விண்ணமங்கலம் முருகன், கோவிந்தசாமி, கார்த்தி, விஜயகுமார், பெரியாங்குப்பம் சிவா, ஆசிரியர் குட்டிமணி, வடபுதுபட்டு மகேஷ்,வலையாம்பட்டு சதீஷ், மின்னூர் தேவன், முரளி, சின்னசேரி விஜய், பச்சையப்பன், சான்றோர் குப்பம் நாகராஜ், விஜய் திருமலை குப்பம் பாலகணேஷ், ரமேஷ், மகேந்திரன், நடராஜ் புரம் சுதாகர், சரவணன், தெக்குப்பட்டு யுவராஜ், ராமநாயக்கன்பேட்டை செல்வகுமார் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்



## அமர்நாத் புனித யாத்திரை 9,153 பக்தர்கள் ஞாயிற்றுக்கிழமை பயணம்

ஜம்மு, ஜூலை.13-

ஜம்முவில் உள்ள பகவதி நகர் யாத்ரி நிவாஸிலிருந்து ஞாயிற்றுக்கிழமையன்று 9,153 பக்தர்கள் புனித அமர்நாத் யாத்திரையில் பங்கேற்கப் புறப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.2,345 பெண்கள் மற்றும் 18 குழந்தைகள் உட்பட மொத்தம் 9,153 பக்தர்களைக் கொண்ட 11வது குழுவினர், பல அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் 359 வாகனங்களில் புறப்பட்டனர். கந்தர்பால் மாவட்டத்தில் உள்ள பால்டால் மற்றும் அனந்த்நாக் மாவட்டத்தின் பஹல்காமில் உள்ள நுன்வான் ஆகிய இரண்டு முகாம்களுக்கு பக்தர்கள் இரண்டு தனித்தனி வாகன அணிவகுப்புகளாக அனுப்பி வைக்கப்பட்டனர்.3,429 பக்தர்களை ஏற்றிச் சென்ற வாகனங்கள் அதிகாலை 2:44 மணியளவில் பால்டால் முகாமை நோக்கி புறப்பட்டன; அதேவேளையில், 5,724 பக்தர்களை ஏற்றிச்சென்ற வாகனங்கள் அதிகாலை 3:35 மணியளவில் நுன்வான் முகாமை நோக்கி புறப்பட்டன.ஜூலை 3ஆம் தேதி அமர்நாத் யாத்திரை தொடங்கியது. இயற்கையாக உருவான பனிலிங்கம் அமைந்துள்ள இந்தக் புனித குகைக் கோவிலில் 2.30 லட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் இதுவரை வழிபாடு செய்துள்ளனர். 57 நாட்கள் நடைபெறும் இந்த அமர்நாத் யாத்திரை, ரக்ஷா பந்தன் பண்டிகை நாளான ஆகஸ்ட் 28ஆம் தேதி நிறைவடையும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது.

## "எங்கள் ஆட்சியை கவிழ்க்க பாஜக முயற்சி" ஜம்மு காஷ்மீர் முதல்வர் குற்றச்சாட்டு

ஸ்ரீநகர், ஜூலை.13-

"எனது தலைமையிலான அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக, எங்கள் கட்சி எம்எல்ஏக்களுக்கு ரூ.20 கோடி முதல் ரூ.30 கோடி வரையில் கொடுப்பதாகவும், அமைச்சர் பதவிகள் மற்றும் மாநில அந்தஸ்து வழங்குவதாகவும் பாஜக பேரம் பேசுகிறது" என்று ஜம்முகாஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா குற்றம்சாட்டியுள்ளார்.



ஸ்ரீநகரின் ஹஸ்ரத்பாலில் நடைபெற்ற தொண்டர்கள் கூட்டத்தில் உரையாற்றிய அப்துல்லா, "தேசிய மாநாட்டுக் கட்சியைப் பிளவுபடுத்த பாஜக தொடர்ந்து முயன்று வருகிறது. ஜம்முவைச் சேர்ந்த எம்எல்ஏ ஒருவர் என்னிடம் வந்து, உச்ச நீதிமன்ற வழக்கறிஞராக இருக்கும் பாஜக நிர்வாகி ஒருவர், தங்களுக்கு ஆதரவளிக்குமாறு கேட்டுக்கொண்டு, ரூ.2030 கோடி, அமைச்சர் பதவி மற்றும் மாநில அந்தஸ்து ஆகியவற்றை வழங்குவதாக உறுதியளித்ததாகக் கூறினார். மக்களின் நம்பிக்கை மிகவும் பலவீனமானது என்று அவர்கள் நினைக்கிறார்கள்.பணம் மற்றும் அமைச்சர் பதவிகளை வழங்குவது பலனளிக்காத நிலையில், இப்போது எங்கள் எம்.எல்.ஏ.க்களிடம் ரகசியமாக, 'எங்களுடன் வாருங்கள், நாங்கள் உங்களுக்கு மாநில அந்தஸ்தை பெற்றுத் தருகிறோம்' என்று கூறி வருகிறார்கள். ஆனால், எனது எம்எல்ஏக்கள் விலைபோக மாட்டார்கள். இந்த மேடையில் உள்ள எந்தவொரு எம்எல்ஏவும் 30 கோடி ரூபாய்க்கோ அல்லது 100 கோடி ரூபாய்க்கோ தங்கள் நேர்மையை விற்க மாட்டார்கள். ஏனெனில், நாங்கள் இறைவனுக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள் என்பது எங்களுக்குத் தெரியும்.

பின்வாசல் வழியாக உள்ளே நுழைந்துவிடலாம் என்று நினைக்கும் அளவுக்கு நாங்கள் பலவீனமானவர்கள் அல்ல. பின்வாசல் வழியாக வந்து உங்களால் ஒருபோதும் முன்வரிசை அதிகாரத்தை அடைய முடியாது. மக்கள் உங்களைப் பின்வரிசையிலேயே வைத்துள்ளனர், அங்கேயேதான் நீங்கள் நீடிப்பீர்கள்" என்றார்.





■ சென்னை, சூலை அங்காளம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் திருக்கோயில் ஆலய புணராவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. இக்கோயில் நிகழும் ஆனி மாதம் 26 ஆம் நாள் முதல் 28 ஆம் நாள் வரை வெள்ளிக்கிழமை தொடர்ந்து இரண்டு நாட்களாக யாக பூஜைகளும் மேலும் ஞாயிற்றுக்கிழமை 12.07.2026, திரியோதசி திதி மிருகசீரிஷம் நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுப தினத்தில் காலை 9 மணிக்கு மேல் பத்தரை மணிக்குள்ளாக சிம்ம லக்கனத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஏராளமான பக்த கோடிகள் கலந்து கொண்டு அம்மன் அருள் பெற்று சென்றனர். ஆலய தலைவர் ரவி, மற்றும் பெருமாள், மகேஷ், பார்த்தசாரதி, ரகு, பாபு, பாலா, உதயகுமார், ராஜேஷ், ரமேஷ் , மதன், சுரேஷ், தண்டபாணி, கிருஷ்ணா, முகன், லோகு, செந்தில், சுப்பிரமணி, முருகன், தினேஷ், கணேஷ், கார்த்திக் கிருஷ்ணா, விஷால், அசோக், ஏமல் ஆகியோர் கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடத்தினர்.

## புழல் சென்னை கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில் குண்டும், குழியுமாக மாறிய சர்வீஸ் சாலை

### வாகன ஓட்டிகள் அவதி

புழல், ஜூலை.13-

செங்குன்றம் சாமியார் மடத்திலிருந்து சென்னை புழல் நோக்கி செல்லும் சென்னை கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலை, சர்வீஸ் சாலையில் பல இடங்களில் சாலை பழுதடைந்துள்ளது. குறிப்பாக, இச்சாலையில் மின்விளக்கு வசதி இல்லாததால், நள்ளிரவு நேரங்களில் மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள், நிலைத்தடுமாறி சாலையில் விழுந்து படுகாயம் அடைந்தும், பெரிதும் சிரமப்பட்டு சென்று வருகின்றனர்.





குறிப்பாக, புழல் அடுத்த தண்டல் கழனி, புழல் மத்திய சிறைச்சாலை எதிரே சாலைகள் மிகவும் சேதமடைந்து காணப்படுகிறது. எனவே, உயிர் சேதங்கள் ஏற்படுவதற்கு முன்பு, சம்பந்தப்பட்ட தேசிய நெடுஞ்சாலை துறையினர் உரிய நடவடிக்கை எடுத்து சாலையை சரி செய்தும், சர்வீஸ் சாலைகளில் மின்விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வாகன ஓட்டிகள் கோரிக்கை வைத்துள்ளனர். இதுகுறித்து வாகன ஓட்டிகள் கூறுகையில்; `புழல் அம்பேத்கர் சிலை சிக்னல், சிறைச்சாலை சிக்னல், காவாங்கரை சிக்னல் ஆகிய பகுதிகளில் வாகனங்களில் சாலையை கடந்து செல்லும்போதும், பொதுமக்கள் நடந்து செல்லும்போதும், பல நேரங்களில் சிக்னல்களை மீறி செல்லும்போது போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, விபத்துக்கள் அதிகரிக்கிறது.எனவே, மேற்கண்ட மூன்று இடங்களிலும் காலை, மாலை நேரங்களில் போக்குவரத்து போலீசார் நின்று, போக்குவரத்து சரி செய்தால் எந்தவித விபத்தும் நடக்காமல் இருக்கும். அதற்கு மாதவரம் போக்குவரத்து போலீசார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றனர்





Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161